02.08.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையில் ஓரிரு இடங்களில் கனமழை வாய்ப்பு




தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் கே.பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறுகையில் , "கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்துள்ளது. மதுராந்தகத்தில் அதிகபட்சமாக 15 செமீ மழை பதிவாகியுள்ளது.

காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக , அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் உள் பகுதிகளில் பரவலாகவும் , கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. மேலும் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது அடுத்த 3 நாட்களுக்கு இதே நிலை நீடிக்கும்" என்று பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

### மேட்டூரிலிருந்துநீர் திறப்பு அதிகரிப்பு



மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 500 கனஅடியில் இருந்து 2500 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா மாநிலத்தில் காவிரி மற்றும் கபினியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால் , கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி அணைகளில் இருந்து காவிரியில் கணிசமான அளவு நீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், மேட்டூர் அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

மொத்தம் 120 அடி உயரம் கொண்ட மேட்டூர் அணைக்கு கடந்த சில நாட்களாக விநாடிக்கு 6 ஆயிரம் கனஅடிக்கு மேலாக நீர்வரத்து இருந்து வருகிறது. நேற்று முன்தினம் விநாடிக்கு 7,271 கனஅடியாக இருந்த நீர் வரத்து நேற்று காலை சற்று குறைந்து விநாடிக்கு 7.181 கனஅடியாக இருந்தது. எனினும் , கடந்த 4 நாட்களில் அணை நீர்மட்டம் 5 அடி உயர்ந்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணை நீர் மட்டம் 35.67 அடியாகவும், நீர் இருப்பு 9.96 டிஎம்சி-யாகவும் இருந்தது.

இதனிடையே, மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 500 கனஅடி வீதம் திறக்கப்பட்டு வந்த நீரின் அளவு நேற்று காலை முதல் திடீரென அதிகரிக்கப்பட்டு விநாடிக்கு 2,500 கனஅடியாக உயர்த்தப் பட்டுள்ளது.